இந்திய-நார்வே மீன் பிடித் தொழிலாளர்கள்.

*116 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபத்தில் இருக்கும் இந்திய-நார்வே மீன்பிடித் திட்டத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை அரசுக்கு அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சட்ட மன்றப் பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : மேசையின் மீது வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் சாதாரண இலாக்காவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு எப்படி உள்ளதோ அந்தச் சட்டத்தைப் பற்றிய விவரம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. பாலைவனம் போன்று எவ்வித வசதியும் இல்லாத கடற்கரைகளில் வேலை செய்யும் மீன் பிடி தொழிலாளர்கள்.. ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : படகு கட்டும் தொழிலாளர்களுக்கு விபத்து ஏதாவது ஏற்பட்டால் அங்கிருந்து பல மைல்களுக்கு அப்பால் உள்ள மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்வதற்குமுன் பலர் உயிரிழக்கும்படியான நிலை இருக்கிறது என்பது தெரியுமா ? ஆகவே, உடனடியாக மருத்துவ மனை கட்டுவதற்கான முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது அந்தத் தொழிற்கூடத்தில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால் உடனடியாக முதல் உதவி அளிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அச் செலவுகளை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ அதிகாரியை, தொழிலாளர்களைக் கவனித்துக் கொள்வதற்காக நியமிப்பதற்கான செயற்குறிப்பை மீனளத் துறை இயக்குநர் இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ அதிகாரியுடன் கலந்து ஆலோசித்து வருகிறார். அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு நோயாளிகளை எடுத்துச் செல்ல மண்டபத்திலுள்ள படகு கட்டும் தளத்திற்காக ஆம்புலன்ஸ் வண்டி வாங்குவதற்கான செயற்குறிப்பும் உள்ளது என்கிற நல்ல விவரங்கள் எல்லாம் அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சேரணி அலுவலகங்கள்.

*117 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் எத்தனை இடங்களில் சேரணி அலுவகங்கள் திறக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தமிழகத்தில் சென்னை மாநகரில் மட்டும் சேரணி அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் சேரணியின் பணிக்காக மாவட்ட ஆட்சியாளரின் வளர்ச்சிப் பிரிவில் மண்டலத் தலைவரின் உபயோகத்திற்காக இடம் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

---

*நூல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 பிப்ரவரி 26]

திரு. கொளத்தூர் கோதண்டம் : மற்ற எல்லா மாவட்டங்களிலும் இதுபோன்று தனி அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைப்பற்றி இப்போது உத்தேசம் ஒன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்தில் வளர்ச்சிப்பணிப் பார்வைக்கு ஒரு தலைவர் இருந்தார். அவரிடமே சீரணிப்படைப் பொறுப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

திரு. கே. வினாயகம் : சீரணிப்படை அதிகாரியாக மாவட்ட அளவில் நியமிக்கப்படுகிற தலைவர்கள் — அரசியல்வாதிகளாக நியமிக்கப் படுகிறார்களா ? உத்தியோகப்பற்றுள்ளவர்களே நியமிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நாட்டுக்கு நல்ல பணி செய்யக்கூடிய உள்ளம் படைத்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of information, My question is specific, namely, are they officials or non-officials or are they politicians. I want a direct answer from the Government.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொண்டு உள்ளம் படைத்த உத்தியோகப் பற்றற்றவர்களை நியமித்திருக்கிறோம்.

தவிடு விநியோகம்.

* 118 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடுகளுக்குக் கார்டு பெர்மிட் முறை மூலமாக தவிடு விநியோகம் செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ? ஒரு மாட்டுக்கு எவ்வளவு தவிடு தரப்படுகிறது ?

(உ) அதைப்போல் வைக்கோலும் விநியோகிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தக் கேள்வி நீண்ட காலத்திற்கு முன் போடப்பட்டது. பஞ்ச நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது மற்ற மாநிலங்களில் இருந்து மாட்டுத் தீவனம் கொண்டுவந்து விநியோகம் செய்யவேண்டிய சூழ்நிலை இருந்ததே, அது உண்மைதானா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கோதுமைத் தவிடு விநியோகம் 1966 பிப்ரவரியில் இருந்து 1968 வரை இருந்தது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போட்டு நீண்ட காலம் ஆயிற்று என்று சொன்னீர்கள். லாப்ஸ் ஆகியிருந்த கேள்வியை நீங்கள்தான் 1970-இல் புதுப்பித்திருக்கிறீர்கள்.